# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அ. குமாரகுரு எழுதிய ஓர் ஆய்வு நூல் ''இறந்தபின் எங்கு செல்கிறோம்'' எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும் விலை: ரூ. 18/-. [18674]

### இடமாற்றம்

வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் சிகிச்சைகளைத் தொடர்கிறார். சகல நோயாளர்களும் வழமைபோல் சிகிச்சை பெறலாம். இடம்பெயர்ந்தோருக்கு சலுகை அடிப்படையில் சிகிச்சை அளிக்கப்படும். (18590)

### மணமகள் தேவை

யாழ் இந்து 33 வயது 7இல் செவ்வாய் இராசபாவம் 47/16, நட்சத்திரம்: மூலம் ஹொலண்டில் வேலை பார்க்கும் மணமகனுக்கு அழகான பெண் தேவை. வந்து திருமணம் செய்வார் சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது ABCDE 328 நாவலர்றோட் ஆனைப்பந்தி. (18854)

யாழ் இந்து 30 வயது லக்கினத்தில் கேது பாவம் 46/16, நட்சத்திரம்: சுவாதி நோர்வேயில் தொழில் புரியும் மணமகனுக்கு அழகான மணமகள் தேவை, ABCDE 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. (18855)

### ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும் பியூட்டீ, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (இ-0798)

## வேம்படி மகளிர் கல்லூரி

வேம்படி மாணவிர் கல்லூரியில் ஆண்டு 5 இல் மாணவிகளை அனுமதிக்க விண்ணப்பங்கள் கோரப்படவில்லை.

நேற்றைய உதயனில் வெளியான விளம்பரத்தில் ஆண்டு 5 தவறுதலாக அச்சாகிவிட்டது.

# மணமகள் தேவை

யாழ். இந்து 26 வயதுடைய இங்கிலாந்தில் விசாவுடன் படித்துக் கொண்டிருப்பவருக்கு மணமகள் தேவை.

அழகான, 22 - 24 வயதுக்குட்பட்ட, சுமாரான உயரமுடைய நல்ல குடும்பத்தைச் சேர்ந்த, G. C. E. (A/L) படித்துள்ள, ஓரளவு ஆங்கில அறிவும் உள்ள பெண்ணுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

திருமணம் செய்து விசாவுடன் இங்கிலாந்து செல்லத் தயாராக இருக்கவேண்டும்.

விரும்பியவர்கள் முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்:-

இல. 370, மே / பா உதயன்,
யாழ்ப்பாணம்.

(18856)

# மரண அறிவித்தல்

## நாகநாதர் மருதப்பு

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகநாதர் மருதப்பு நேற்றுக் காலமானார்.

அன்னார் வேரகம்மாவின் கணவரும், காலஞ்சென்ற தம்பிமுத்து, வள்ளிப்பிள்ளை, பொன்னம்மா, நாகம்மா, அன்னம்மா ஆகியோரின் சகோதரரும், விமலாதேவியின் தந்தையும், தனபாலசிங்கத்தின் மாமனாரும் ஹம்சா, கௌசிகவதனி, திவாஜினி, கனுஜா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 55/11, கல்லூரி வீதி நீராவியடி இல்லத்திலிருந்து இன்று பிற்பகல் 4-00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
55/11, கல்லூரி வீதி, நீராவியடி. (18787) ஆ. தனபாலசிங்கம் (மருமகன்)

## முல்லையில் ஊரடங்கு

கொழும்பு, நவ. 23

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுக் காலை தொடக்கம் ஊரடங்குச்சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (த)

## தீவக மக்களுக்கு தொடர்ந்து உலர் உணவு

யாழ்ப்பாணம், நவ. 23

தீவகத்திலிருந்தும் பூநகரியிலிருந்தும் இடம் பெயர்ந்தோருக்கு தொடர்ந்து உலர் உணவு வழங்கப்படும்.

அரசாங்கம் இதற்கான அனுமதியை யாழ் அரச அதிபருக்கு வழங்கியிருப்பதாக அறியவந்தது. (உ)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கேசவலிங்கம் சத்தியபாமா

(தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம்)

மலர்வு: 1950
உதிர்வு: 1988
திதி: 23-11-1991

அன்பின் திருவுருவே பாசத்தின் பிறப்பிடமே ஆண்டு மூன்று ஓடினாலும் என்றும் மறையமாட்டோம் உம் புன்சிரிப்பை எம் வாழ்வில், எங்கள் அன்பு பாமாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

கணவர், மக்கள்
தாயார், தம்பி,
உற்றார், உறவினர்

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை
# 1992 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் குத்தகைகள் சார்பில் 01-01-1992 ஆம் திகதி தொடக்கம் 31-12-1992 ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்குரிய கேள்விகள் 10-12-1991 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் (சுன்னாகம்) 09-12-1991 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்கமுடியாத படிவக் கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் செலுத்துவதன்பேரில் வழங்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரத்தின் மூலப் பிரதியை குறிப்பிட்ட பிரதேச சபை அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் ''விசேட ஆணையாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்'' என விலாசமிட்டுப் போடுதல் வேண்டும். இணைப்பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சிப் பணிமனை, யாழ்ப்பாணம்'' என விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை

| | குத்தகை விபரம் | படிவக் கட்டணம் | கேள்வி வைப்புப் பணம் | கேள்வித் தொகையுடன் மேலதிகமாக செலுத்த வேண்டிய மாத வாடகை | ஏற்றுக் கொள்ளப் படக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1 | சுன்னாகம் மத்திய சந்தை | 100/- | 1000/- | -- | 8,64,000/- |
| 2 | மாட்டிறைச்சிக்கடை (மீ. இல. 1) | 100/- | 1000/- | 100/- | 8,15 000/- |
| 3. | ஆட்டிறைச்சிக்கடை (மீ. இல 2) | 50/- | 500/- | 100/- | 14,000/- |
| 4. | கருவாட்டுக்கடை இல. 3 | 15/- | 100/- | 60/- | 1,800/- |
| 5. | கருவாட்டுக்கடை இல 4 | 15/- | 100/- | 60/- | 1,800/- |
| 6. | கருவாட்டுக்கடை இல. 5 | 15/- | 100/- | 60/- | 1 800/- |
| 7. | கருவாட்டுக்கடை இல. 6 | 15/- | 100/- | 60/- | 1 800/- |
| 8. | கருவாட்டுக்கடை இல. 7 | 15/- | 100/- | 60/- | 1 800/- |
| 9. | உடுவில் சந்தை | 50/- | 500/- | —— | 3 800/- |
| 10. | உமி, கடதாசி விற்பனை செய்யும் உரிமை | 15/- | 500/- | —— | 1,100/- |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1. | மருதனார்மடம் சந்தை | 50/- | 1000/- | —— | 68 000/- |
| 2 | இணுவில் சந்தை | 50/- | 1000/- | —— | 4,500/- |
| 3. | இணுவில் சந்தை-ஆட்டிறைச்சிக்கடை | 25/- | 100/- | —— | 7 200/- |
| 4 | தாவடி ஆட்டிறைச்சிக்கடை | 25/- | 100/- | —— | 8 300/- |
| 5. | தாவடி மாட்டிறைச்சிக்கடை | 25/- | 100/- | —— | 5,000/- |
| 6. | உடுவில் ஆலடி-மாட்டிறைச்சிக் கடை | 25/- | 100/- | —— | 13 000/- |
| 7. | உடுவில் மல்வம்-மாட்டிறைச்சிக் கடை | 25/- | 100/- | —— | 6 000/- |
| 8. | தாவடி தெற்கு மாட்டிறைச்சிக் கடை | 25/- | 100/- | —— | 7 000/- |
| 9 | இணுவில் சந்தை-வெளிக் கடைகள் | | | | |
| | (அ) இல. 1, 2 | 25/- | 100/- | —— | 660/- |
| | (ஆ) இல. 8 | 25/- | 100/- | —— | 350/- |
| | (இ) இல. 9 | 25/- | 100/- | —— | 800/- |
| | (ஈ) இல. 13 | 25/- | 100/- | —— | 600/- |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1. | மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 50/- | 300/- | —— | 55 000/- |
| 2. | ஏழாலை தெற்கு சந்தை | 25/- | 50/- | —— | 800/- |

தனுஜா தணிகாசலம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.

வலி-தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்,
20-11-1991

(இ/ஏ..)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்
# 1992 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின், மானிப்பாய் பட்டினம் / பண்டத்தரிப்பு பட்டினம் / மானிப்பாய் கிராமம் / பண்டத்தரிப்பு கிராமம் ஆகிய நிர்வாகப் பிரதேசத்திற்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சந்தைகள், இறைச்சிக் கடைகள், சந்தைக் கடைகள் ஆகியவற்றிற்கான சீல் வைத்த கேள்விகள் 12-12-1991 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்களை பிரதேசசபையின் உப அலுவலகங்களில், கேள்வி வைப்புப் பணத்தினையும், மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்தையும் 28-11-1991 ஆம் திகதி முதல் 11-12-1991 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரையும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் சார்பான விபரங்களையும் நிபந்தனைகளையும் தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

க. கனகரெத்தினம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,

தலைமை அலுவலகம்,
வலி. தென்மேற்கு பிரதேசசபை,
நகர மண்டபம்,
மானிப்பாய்.
20 11 91.

அட்டவணை

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | கடையின மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | நிர்ணயிக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| **மானிப்பாய் பட்டணம்:** | | | | | |
| 1. | ஆட்டிறைச்சிக் கடை (சந்தை) | 200/- | 500/- | 100/- | 30,000/- |
| 2 | மாட்டிறைச்சிக் கடை (சந்தை) | 200/- | 500/- | 100/- | 100,000/- |
| 3. | கட்டுடைச் சந்தை | | 300/- | 100/- | 1 500/- |
| 4 | மானிப்பாய் மத்திய சந்தை | | 500/- | 100/- | 100 000/- |
| **பண்டத்தரிப்பு பட்டணம்:** | | | | | |
| 1. | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை | | 500/- | 100/- | 400,000/- |
| 2 | மாட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 100/- | 100,000/- |
| 3 | ஆட்டிறைச்சிக் கடை | 50/- | 300/- | 100/- | 3,500/- |
| 4 | குப்பை வண்டிலுக்கு மாடு வழங்குவதற்கு | | 100/- | 100/- | 475/- |
| **மானிப்பாய் கிராமம்:** | | | | | |
| 1. | சாவற்கட்டுச் சந்தை ஆனைக்கோட்டை | | 300/- | 100/- | 6,000/- |
| 2 | பிரசாத் சந்தை, நவாலி | | 300/- | 100/- | 30,000/- |
| 3 | சாக்கைதீவுச் சந்தை ஆனைக்கோட்டை | | 300/- | 100/- | 10 000/- |
| 4. | மாட்டிறைச்சிக் கடை பிரசாத் சந்தை | 50/- | 500/- | 100/- | 35 000/- |
| 5 | ஆட்டிறைச்சிக் கடை சாவற்கட்டுச் சந்தை | 50/- | 300/- | 100/- | 5,000/- |
| 6. | அலுவலக உணவு குத்தகை | | 100/- | 100/- | 3,000/- |
| **பண்டத்தரிப்பு கிராமம்:** | | | | | |
| 1. | மாதகல் சந்தை | | 300/- | 100/- | 25,000/- |
| 2 | விளான் சந்தை | | 300/- | 100/- | 6,000/- |
| 3 | இளவாலைச் சந்தை | | 300/- | 100/- | 10,000/- |
| 4. | மாகியப்பிட்டி சந்தை | | 300/- | 100/- | 10,000/- |
| 5 | மாட்டிறைச்சிக் கடை மாதகல் | 50/- | 500/- | 100/- | 10,000/- |
| 6. | மாட்டிறைச்சிக் கடை இளவாலை | 50/- | 500/- | 100/- | 50,000/- |
| 7 | மாட்டிறைச்சிக் கடை மாகியப்பிட்டி | 50/- | 500/- | 100/- | 10,000/- |
| 8. | அலுவலக உணவு குத்தகை | | 100/- | 100/- | 1,000/- |

(இ/0918)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மற்றொரு சாரார்

வடக்கு-கிழக்கில் நிலவும் போர் நிலைமையைப் பயன்படுத்தி பொதுப் பரீட்சைகள் நடத்தப்படாமல் ஒத்தி வைக்கப்படுவதால், தமிழ் மாணவர்களின் கல்விக் காலம் வீணாவது குறித்தும் இப் பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

ஆகப் பிந்திய தகவல்களின் பிரகாரம், 1990 ஆம் ஆண்டு டிசம்பரில் நடவாமல் ஒத்தி வைக்கப்பட்ட ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சை அடுத்த மாதத்தில் நடக்க உள்ளது. அவர்களின் கல்விக் காலப் பின்னடைவைத் தவிர்க்கும் முகமாக, சம்பந்தப்பட்ட மாணவர்கள் சென்ற வருடத்திலேயே பரீட்சைக்குத் தோற்றியவர்களாகக் கருதப்பட்டு 1993இல் உயர்தர பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இது போலவே 1991 ஆகஸ்டில் நடக்காமல் (1992 ஏப்ரலுக்கு) ஒத்திவைக்கப்பட்டிருக்கும் பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவர்கள், பல்கலைக்கழக அனுமதியைப் பொறுத்த மட்டில் 1991 இலேயே பரீட்சைக்குத் தோற்றியவர்களாகக் கருதப்படுவர் என்று கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்திருந்தார். அதன் மூலம் தமிழ் மாணவர்களின் உயர் கல்வியில் ஏற்பட இருந்த ஒரு வருட காலப் பின்னடைவு தவிர்க்கப்பட்டுள்ளது.

எனினும் 1990 இல் உயர்தரப் பரீட்சை உரிய முறையில் நடத்தப்படாததால் பாதிக்கப்பட்ட மற்றொரு சாராரும் இருக்கிறார்கள்.

1990 ஆகஸ்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மூன்றையும் தவிர்ந்த ஏனைய தமிழ் மாவட்டங்களில் அரசு ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையை நடத்தியது. ஆனால் மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற மாவட்டங்களில் இருந்து விண்ணப்பித்த தமிழ் மாணவர்கள் பலர் பரீட்சைக்குத் தோற்ற முடியவில்லை.

இராணுவ வன்செயல்களுக்கு அஞ்சி அவர்கள் பரீட்சை நடக்காத முன் சொன்ன மாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்திருந்தனர். மன்னார், வவுனியா மாவட்ட மாணவர்களுக்குக் கூட இதே கதி ஏற்பட்டிருந்தது.

அந்த மாணவர்கள் இடம்பெயர்ந்திருந்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அவ்வேளை ஊரடங்கு அமுலில் இருந்தது. போக்குவரத்துக் கஷ்டங்களும் அனந்தம். அதன் விளைவாக சம்பந்தப்பட்ட மாணவர்கள் தமது சொந்த மாவட்டங்களில் பரீட்சை பெயருக்கு நடந்த போதிலும் அதற்குத் தோற்ற முடியவில்லை.

ஆகவே 1992 ஏப்ரலில் விசேட பரீட்சை நடக்கும் போது, மேற்படி பாதிக்கப்பட்ட மாணவர்களும் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவும், 1991 பரீட்சைக்குத் தோற்றியவர்களாகவே கருதப்பட்டு பல்கலைக்கழக அனுமதிக்குப் பரிசீலனை செய்யப்படவும் ஏற்பாடு செய்வது அவசியம்.

தங்கள் தவறால் அன்றி நாட்டு நிலைமை காரணமாகப் பரீட்சைக்குத் தோற்றமுடியாமற் போன மாணவர்களுக்கு நீதி வழங்கப்பட்டாக வேண்டும். பரீட்சைப் பகுதியும், கல்வி அமைச்சும், சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரிகளும் இது விடயத்தில் அக்கறை செலுத்துவார்களா?

## இன்றைய மாவீரர் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 23

மாவீரர் வாரத்தின் மூன்றாவது நாளான இன்று மாலையில் பின்வரும் இடங்களில் கூட்டங்கள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன:

ஏரலெட்டி கப்பூது அ. த. க. பாடசாலை, நாகர்கோவில் நாகேஸ்வரி வித்தியாலயம், ரேணிமார் வித்தியாலயம், புலோப்பளை கல்வி வளர்ச்சிக் கழகம், கோப்பாய் நவக்கிரி குட்டிபாலர் பாடசாலை, தெல்லிப்பளை பன்னாலை, வயிரு திருஞானசம்பந்தர் வித்தியாலயம் ஆகியவற்றிலும்—

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலய முகாமிலும் கூட்டங்கள் நடைபெறும். (த-5)

## திருமலையில் இன்று எழுத்தாளர்களுக்குப் பரிசு

திருகோணமலை, நவ. 23

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் 1988-89ஆம் ஆண்டுக்கான இலக்கிய (சாகித்திய) விழா இன்று 23ஆம் திகதி திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் நடைபெற உள்ளது.

மாகாண சபையின் பிரதம செயலாளர் திரு. செ. கணேசநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் சாகித்தியப் பரிசு பெற்றவர்களுக்குப் பரிசுப் பணமும், சான்றிதழ்களும் வழங்கப்படும். பரிசு பெறும் எழுத்தாளர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவர்.

பின்வரும் எழுத்தாளர்கள் பரிசு பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

★ சிறுகதை — உமா வரதராஜன் (உள்மன யாத்திரை)

★ மரபுக் கவிதை — திரு. மு. சுந்தையா (திருக்கோணேஸ்வர மான்மியம்)

★ புதுக்கவிதை — சோலைக்கிளி (எட்டாவது நரகம்)

★ நாடகம் — அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை (முதலம் பிள்ளை)

★ ஆக்க இலக்கியம் — திருமதி த. குணபாலசிங்கம் (இலங்கையில் தொல்லியல் ஆய்வும் திராவிட கலாசாரமும்) (அ)

## கண்காட்சிக் கட்டணம் அகதிகளின் நலனுக்கு!

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்று வருகிறது. இதற்கு நுழைவுக் கட்டணமாக அறவிடப்படும் இரண்டு ரூபாய் பணம் சேகரிக்கப்பட்டு, இடம்பெயர்ந்த மக்களின் அவசர துடைப்புப் பணிகளுக்கு வழங்கப்பட இருக்கிறது.

இந்தப் புகைப்படக் கண்காட்சியில் தமிழீழப் போராட்ட வரலாறு, போராட்டத்தில் வீரமரணம் அடைந்த 8,590 மாவீரர்களின் விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் தமிழ் மக்களுக்கு ஸ்ரீலங்காப் படையினரால் இழைக்கப்பட்ட கொடுமைகள், புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள், பயிற்சி முகாம்கள் போன்றவற்றின் விவரங்கள் போன்றவற்றையும் கண்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. (ஒ)

## சங்கானையில் மீட்பு நிதி மீளப் பெறுவோர் விவரம்

தமிழீழ மீட்பு நிதிக்கு பங்களிப்புச் செய்தவர்களில் ஆயிரத்துநூறு குடும்பத்தினருக்கு கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக மீட்பு நிதி மீளளிக்கப்பட விருக்கிறது.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளளிப்புக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளோரின் தொடர் இலக்கங்கள் வருமாறு:-

### சங்கானை

தை—1991

யா/ச.

| | | | |
|---|---|---|---|
| 106 | 161 | 221 | 334 |
| 336 | 1259 | 1278 | 1746 |
| 2317 | 2319 | 2402 | 2619 |
| 3330 | 3355 | 3687 | |

மாசி

யா/ச

| | | | |
|---|---|---|---|
| 90 | 131 | 292 | 332 |
| 510 | 603 | 608 | 873 |
| 1308 | 1524 | 2123 | 2173 |
| 3418 | 3941 | | |

பங்குனி

யா/ச

| | | | |
|---|---|---|---|
| 68 | 265 | 269 | 307 |
| 392 | 545 | 636 | 1861 |
| 2383 | 2951 | 3702 | 4105 |
| 4211 | | | |

சித்திரை

யா/ச

| | | | |
|---|---|---|---|
| 10 | 282 | 675 | 693 |
| 824 | 864 | 1267 | 1756 |
| 2045 | 2307 | 2445 | 3321 |
| 3505 | 4001 | | |

வைகாசி

யா/ச.

| | | | |
|---|---|---|---|
| 711 | 721 | 925 | 1520 |
| 2133 | 2320 | 2639 | 2849 |
| 3548 | 4209 | 4626 | |

ஆனி

யா/ச.

| | | | |
|---|---|---|---|
| 436 | 483 | 753 | 805 |
| 934 | 2532 | 3014 | 3790 |
| 3957 | 4159 | | |

ஆடி

யா/ச.

| | | | |
|---|---|---|---|
| 20 | 173 | 271 | 421 |
| 613 | 810 | 1298 | 2095 |
| 2952 | 3786 | | |

ஆவணி

யா/ச.

| | | | |
|---|---|---|---|
| 259 | 445 | 528 | 548 |
| 606 | 881 | 1307 | 1642 |
| 3061 | 4473 | | |

புரட்டாசி

யா/ச.

| | | | |
|---|---|---|---|
| 325 | 329 | 341 | 622 |
| 814 | 833 | 1154 | 1288 |
| 4015 | | | |

ஐப்பசி

யா/ச.

| | | | |
|---|---|---|---|
| 13 | 617 | 954 | 1646 |
| 2717 | 3135 | 4250 | 4364 |
| 4410 | | | |

கார்த்திகை

யா/ச.

| | | | |
|---|---|---|---|
| 136 | 150 | 298 | 440 |
| 681 | 996 | 2056 | 2097 |
| 2142 | | | |

### கோப்பாய்

கார்த்திகை

யா/கோ.

| | | | |
|---|---|---|---|
| 83 | 141 | 164 | 310 |
| 508 | 1626 | 3755 | 4362 |
| 5332 | | | |

## கச்சாய்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலக்கு வைத்து வீசப்பட்டதாகக் கூறப்பட்டது.

குண்டுவீச்சினால் ஏற்பட்ட பெரும் சத்தங்கள், பல மைல்களுக்கு அப்பாலும் கேட்டன ... தெரிவிக்கப்பட்டது.

## ஆண்டு 9 மாணவருக்கு அதிபர்கள் அழைப்பு

யாழ்ப்பாணம், நவ 23

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் ஆண்டு 9 மாணவர்களுக்கான ஆங்கிலம் - தொழில்நுட்பப் பரீட்சை டிசம்பர் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு யாழ். மாவட்டப் பாடசாலைகளில் உள்ள ஆண்டு 9 மாணவர்கள் அனைவரும் நாளை மறுதினம் திங்கள் தத்தமது பாடசாலை அதிபர்களை சந்தித்து, அந்தப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களில் கையொப்பம் இட வேண்டும் என்று பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் கேட்டுள்ளார். (ஒ-5)

## அதிகாரி திரும்பினார்

யாழ்ப்பாணம், நவ. 23

காங்கேசன்துறையில் கப்பலில் இருந்து உணவுப் பொருள்களை இறக்குதல், அவற்றை அங்கிருந்து எடுத்து வருதல், எடுத்து வரும் பாதையை பாதுகாப்புப் பிரதேசமாக அறிவித்தல் ஆகியவை பற்றிப் பேச்சு நடத்துவதற்காக நேற்று முன்தினம் பலாலிக்கு விஜயம் செய்திருந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி திரு. கிளவ்டியோ நேற்று காலை யாழ். திரும்பினார்.

அவருக்கு சாதகமான பதில் கிடைத்ததாகத் தெரிய வந்தது. [உ-5]

## கச்சாய் நோக்கி ஷெல் வீச்சும்

யாழ்ப்பாணம், நவ. 23

கச்சாய்ப் பகுதியை நோக்கி நேற்று மாலை 6 மணியளவில் ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி இராணுவத்தினரே ஷெல் தாக்குதலை நடத்தினர் என்று நம்பப்படுகிறது. [நு-15]

## விடுதலைப்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவதற்கான எனது முன் முயற்சி பலனளிக்கும்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் வன்செயல்களில் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இலங்கைத் தமிழர் மீது குறிப்பாக மலையகத் தமிழர்கள் மீது விடுதலைப் புலிகள் ஆதிக்கம் செலுத்த அனுமதிக்க முடியாது — என்று கூறினார். (அ-இ)

## படகு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றைத் தடுக்க வேண்டியதை பறிக்கவோ வேண்டிய தேவை இந்தியாவுக்கு இல்லை. ஆனால் இந்தியா அவற்றைப் பிடித்துவிட்டதாகவும் கின்னப்படகு ஒன்றை நீரில் மூழ்கடித்து விட்டதாகவும் கூறுகிறது.

இத்தகைய நெருக்கடிகளுக்கு மத்தியில் தான் நாம் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறோம் என்பதை மக்கள் உணர வேண்டும் — என்று குறிப்பிட்டார். (உ)

## புலிகளுக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது.

சின்ன வர்த்தகரின் வீட்டைச் சோதனையிட்ட போது பெரும் எண்ணிக்கையான வெடி மருந்துப் பொருள்கள் கைப்பற்றப்பட்டனவாம். சின்ன வர்த்தகர் ஒருவருடன் இந்தத் தமிழர் ஒரு ... செய்யப்பட்டார். (அ-10)

சாவகச்சேரியில்

## வேலை கிடைக்காததால் பெண் உண்ணாவிரதம்!

உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் ஆகிய அகிம்சைப் போராட்டங்கள் அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து மட்டும் நடப்பதில்லை.

வெகு சாதாரண விடயங்களுக்கும் அவை கைக்கொள்ளப்படுகின்றன.

சாவகச்சேரி கிராம்புவிலைச் சேர்ந்த 35 வயதான யுவதி ஒருவர் இம்மாதம் ஏழாம் திகதி முதல் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

ஒரு நேரம் பால் மட்டும் அருந்தி உணவைத் துறந்துள்ள இவர், தாம் இறந்தால் தமது உடலை யாழ். பல்கலைக்கழகத்துக்கு வழங்குமாறு தெரிவித்துள்ளாராம்.

இத்தனை வயதாகியும் தமக்கு அரசாங்க உத்தியோகம் கிடைக்கவில்லை என்று மனமுடைந்தே இவர் உண்ணாவிரதமிருக்கிறார்! [க-117]

ஹொனேக்கர் விவகாரம்:

## கோர்பியின் முடிவை மீற ரஷ்யக் குடியரசு முடிவு

பொன், நவ. 22

ஜேர்மனி பிளவுண்டிருந்த போது கிழக்கு ஜேர்மனியின் ஜனாதிபதியாக பணிபுரிந்த திரு. எரிக் ஹொனேக்கரை சோவியத் ஜனாதிபதி கோர்பச்சேவின் உத்தரவை மீறி ஜேர்மனிக்கு அனுப்ப போவதாக சோவியத்தின் ஒரு மாநிலக் குடியரசான ரஷ்யா அறிவித்திருக்கிறது.

இதனை ரஷ்ய குடியரசின் வெளியுறவு அமைச்சர் திக் கொலய் புடோரோப் திங்களன்று ஜேர்மன் தலைநகர் பொன்னில் தெரிவித்தார்.

கிழக்கு ஜேர்மனியின் கம்யூனிஸ்ட் ஆட்சி கவிழ்ந்த போது, திரு. ஹொனேக்கர் ரஷ்யாவிற்கு தப்பி ஓடினார். அவருக்கு சோவியத் ஜனாதிபதி கோர்பச்சேவ் அரசியல் தஞ்சம் அளித்தார்.

திரு. ஹொனேக்கரை தம்மிடம் ஒப்படைக்கும்படி ஜேர்மனி விடுத்த கோரிக்கையை கோர்பச்சேவ் நிராகரித்துவிட்டார். அந்த உத்தரவைப் புறக்கணித்துச் செயற்படப்போவதாக ரஷ்ய மாநிலக் குடியரசு தற்போது அறிவித்திருக்கிறது.

பேர்லின் சுவரைத் தாண்டி மேற்கு ஜேர்மனிக்கு தப்பியோடிய கிழக்கு ஜேர்மனியரைச் சுட்டுக் கொல்ல உத்தரவிட்டதற்காக திரு. ஹொனேக்கர் மீது வழக்கு விசாரணை நடத்தப்போவதாக ஐக்கிய ஜேர்மனி அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (க-எ)

மட்டு. மாவட்டத்தில்

## இராணுவ நடவடிக்கை; புலிகளும் கடும் பதிலடி

யாழ்ப்பாணம், நவ. 23

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தினரின் நடவடிக்கைகளும் அதற்கு எதிரான விடுதலைப் புலிகளின் தாக்குதல்களும் தொடருகின்றன.

நேற்று முன்தினம் காலை 8.00 மணியளவில் டனிச்சன் கேணி, வாகரை, மருதங்கேணி ஆகிய முகாம்களில் இருந்து தமிழ் மக்கள் வாழும் பகுதிகளுக்கு அருகாமையில் உள்ள காட்டுப் பிரதேசமாக இராணுவத்தினர் ரோந்து வந்தனர். விடுதலைப் புலிகள் கடுந்த தாக்குதல் நடத்தியதில் ரோந்து வந்த இராணுவத்தினர் விலகிச் சிதறி ஓடினர். இராணுவத்தினர் அந்த இடத்தில் இருந்து குடிமனைகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இதேவேளை குவாட்டர்ஸ் முகாம், ரம்பைக்குளம் முகாம் ஆகியவற்றிலிருந்து மதுரங்குளம் பகுதிக்கு இராணுவத்தினர் முன்னேற முயற்சித்தனர். இந்த இராணுவத்தினரை கருவப்பஞ்சேனை என்ற இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் அணி ஒன்று அதிரடித் தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதலில் இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கருவப்பஞ்சேனைத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகளினால் ஏற்கனவே வைக்கப்பட்டிருந்த இரு கண்ணி வெடிகளும் வெடிக்கவைக்கப்பட்டன என்றும், இதிலும் இராணுவத்தினர் பலர் இறந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை குவாட்டர்ஸ் முகாமில் இருந்து சிங்கபுரவுக்கு ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் சாரதி ஒருவரும் 20 இராணுவத்தினரும் பலியானது தெரிந்ததே. (இ)

## தீவக மக்களை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகிக்கும் என்ற அச்சத்தில், இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்களுக்கு மன்னிப்பு அளிக்கப்படும் என்றும் —

அவர்கள் திரும்பி வரலாம் என்றும் — அமைச்சர் தெரிவித்தார்.

இந்தப் பொதுமன்னிப்பின் கீழ் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும் பொதுமக்களை பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். (அ-இ)

## வீரமரணம்

வவுனியா மாவட்டத்தில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற நேரடி மோதல் ஒன்றில் காயமடைந்திருந்த, கப்டன் பிரபா (செல்வரட்ணம் செல்வக்குமார் - முல்லைத்தீவு) நேற்று வீரமரணம் அடைந்து விட்டார். (ஓ)

## ஹெலி வீசிய பிரசுரங்கள்

யாழ்ப்பாணம், நவ. 23

ஆனையிறவு, சொம்படிப் பகுதிகளில் நேற்று ஹெலிகொப்டர் ஒன்று தாழப் பறந்து துண்டுப் பிரசுரங்களை வீசியதாகத் தெரிவிக்கப்பட்டது. (நு-15)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# A/L PAPER CLASS

விலங்கியல் - திரு. செங்காதரன்

சனி, ஞாயிறு } 12.30

ஆரம்பம்: 23 — 11 — 1991 (இன்று)

**BOND** INSTITUTES,

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(4402)



# A/L பௌதிகவியல் - மூலங்கள்

திங்கள், செவ்வாய், புதன் — காலை 6. 30

திரு. ரவிந்திரநாதன் B Sc (Cey) Dip - in - Ed.,

ஆரம்பம்: 25 - 11 - 1991

**BOND INSTITUTES**

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(4403)



## குகன் கல்வி நிறுவனம்

(ஆவரங்கால்)

மாவீரர் வார நிகழ்ச்சி

காலம்: 24 - 11 - 91 ஞாயிறு

பி. ப. 1 மணி

பிரதம விருந்தினர்:- திரு. ஆஞ்சநேயர்

சிறப்பு விருந்தினர்:- திரு: வைப்

திரு: செந்தமிழ்

திரு. வரதன் (அதிபர்)

செல்வி. சந்திரிக்கா.

கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றம் ஆகியனவும் இடம் பெறும்.

(18849)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:

1924-05-21

மறைவு:

1991-10-24

### திருமதி நாகேஸ்வரி அருளம்பலம்

(கோண்டாவில் கிழக்கு)

எங்கள் இதயங்களில் அணையாத தீபமாய் சுடர் விட்டு எரிந்து அணைந்த ஒளி விளக்கே! எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே!! உங்கள் சிரிக்கும் முகமும் அன்பான பார்வையும் என்றும் எம் மனதை விட்டு அகலாது. உங்களின் ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இன்று 23-11-1991 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்தி, அந்தியேட்டிக் கிரியைகள், மதிய போசனம் யாவற்றிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"கமலா வாசா",
மானிப்பாய் வீதி,
உரும்பராய் மேற்கு,
உரும்பராய்.

உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்

(18781)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 21 — 12 — 1925



உதிர்வு: 15 — 11 — 1990

திருமதி

### பாக்கியம் அரிநேசரட்ணம்

திதி 23 - 11 - 1991

பண்பின் உறைவிடமே, பாசத்தின் இருப்பிடமே, நீ மறைந்த ஆண்டு ஒன்று சென்றாலும் உன் நினைவுகள் எம் மனத்தை விட்டு என்றும் அகலாதம்மா. அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி இன்று மதியம் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்தில் மோட்சார்ச்சனை நடைபெறும்.

என்றும் மறவாத:

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், உற்றார்
உறவினர்கள்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(18852)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு:
1919 - 05 - 23

உதிர்வு:
1990 - 11 - 23

### சந்தியாப்பிள்ளை செல்வராசா

நீங்கள் பிரிந்து ஆண்டு ஒன்று. எம் நிலையில் மாற்றம் எத்தனையோ! எனினும் எம் நெஞ்சில் உங்கள் நினைவு நீங்கவில்லை. தங்களது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

(18851)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
6 - 10 1927

மறைவு:
23 - 11 - 1990

அமரர்

### சண்முகம் ஞானப்பிரகாசம்

(முன்னாள் கூட்டுறவு சிரேஷ்ட ஆணையாளரும், யாழ். மாவட்ட பி.ந.கூ.ச. சமாசத்தின் ஸ்தாபகரும், அகில இலங்கை கூட்டுறவு சம்மேளனத்தின் உபதலைவரும், யாழ். மாவட்ட உலர்வலய மன்றத்தின் இணைப் பதிகாரியும்)

அன்பின் இலக்கமாய், எல்லோருக்கும் நல்லவராய் வாழ்ந்து, கூட்டுறவை வளர்த்து, எம் இதயங்களை ஆறாத்துயரத்தில் ஆழ்த்தி இன்றுடன் உங்கள் மறைவு ஓராண்டாகியும் உங்கள் அன்பு நினைவுகள் எம் இதயங்களில் என்றும் அலைமோதுகின்றன. தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்
தாய், மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மற்றும் உற்றார், உறவினர்கள்.

10/1, 1ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(18889)

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில் மலராக:
22 — 11 — 1970

விடிவின் விதையாக:
23 — 11 — 1990

23 - 11 - 90 இல் மாங்குளம் முகாம் தகர்ப்பின் போது வீரமரணமடைந்த

### 2 வது லெப்டினன்ட் "கிரிஜா"

(சுந்தரம் இரத்தினவதி)

மாவீரர் தினத்தினிலே கனத்தினிலே நீ ஜொலித்தாய் மாங்குளம் முகாம் தகர்த்து புலிக்கொடியேற்றவைத்த மாவீரர் வரிசையிலே விடுதலைக்கு விதையானாய் வீரமரணத்தை விடிவிற்காய்த் தழுவிக்கொண்ட வீரமகள் நீயெமது நெஞ்சினிலே நிலைவாணாய்.

இன்று 23 - 11 - 91 இல் எமது வீட்டில் நடைபெறும் கிரியைகளில் உற்றார், உறவினர், போராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

— சுந்தரம் குடும்பத்தினர்.

கோண்டாவடி,
[illegible]

(18811)

## மரண அறிவித்தல்கள்

### குமாரசாமி தர்மேந்திரம்

வண்ணார்பண்ணை, பிரப்பங்குளத்தைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வதிப்பிடமாகவும் கொண்டவரும், துணுக்காய், கோப்பாய், முல்லைத்தீவு பிரிவு உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களில் பிரதம லிகிதராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவருமான திரு. குமாரசாமி தர்மேந்திரம் அவர்கள் நேற்றுக் காலமானார். இவர் ஆயிலியத்தின் அன்புக் கணவரும், பாலேந்திரன் (கனடா), ஜெயராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி பாலேந்திரன், தயாவதி (கனடா)யின் மாமனாரும், திருமதி சுந்திரபதி, கோதாரகௌரி, சற்குணசிங்கம், பரமேஸ்வரி, சண்முகநாதன், தேவகி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, தெய்வயானைப் பிள்ளை ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் நீர்வேலி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
ம. க. நடராசா

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(18785)

### ச. இம்மனுவல் தேவசகாயம் (கோப்பியர்)

ச. இம்மனுவல் தேவசகாயம் (கோப்பியர்) 22-11-1991 இல் காலமானார்.

இவர் தொலைத் தொடர்பு ஓய்வுபெற்ற ஊழியரும், அக்னேஸின் அன்புக் கணவரும், துரை இரத்தினம், ஜீவரட்ணம், எஸ்மோ (சவுதி), செல்வதி, றஜீவதி, ராஜ்குமார் (பிரான்ஸ்), இரேன்வதி (ஓமான்), இன்பகுமார் (சாரதி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பேசும், றாசேஸ், திலகம், யேசுதாசன் (யாழ். மாநகர சபை), செலஸ்ரினா (எரிபொருள் கூட்டுத்தாபனம்), வான்சி ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து அடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சமாதானலைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
அக்னஸ், பிள்ளைகள்
அருட்செல்வி திரேசித்ரா
(திரேசம்மா ஆலயம்)

புங்கன்குள றோட்,
யாழ்ப்பாணம்.

(18786)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், காஸ்ரர் வீதி, 393/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23 - 11 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org